**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------

**அசல் வழக்கு எண்.2/2023**

**2023ம்** வருடம் செப்டம்பர் மாதம் **12ம்** நாள் வாதி தரப்பு சாட்சியான வா.**சா.1** ன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர் : நாச்சிமுத்து
த/பெ. : முத்துக்கவுண்டர்
கிராமம் :அக்கரைபட்டி
தாலுகா : ஆத்தூர்
தேதி : 12.09.2023

ஜாதி :
தொழில் : கூலி வேலை
மதம் :
வயது : 67/2023

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னது தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். மேலும் 09.03.2021 அன்று பிரதிவாதிகள் ரூ.35,000/-க்கு எழுதிக்கொடுத்த புரோ நோட் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 14.12.2022 அன்று பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பு ரசீதுடன் அலுவலக நகல் (ரசீதுகள் 2 எண்ணிக்கை) வா.சா.ஆ.2 ஆகவும், 15.12.2022 தேதியில் மேற்கண்ட அறிவிப்பு பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினர்.

P JAISANKAR
Digitally signed by P JAISANKAR
District Munsif Cum Judicial Magistrate,
Athoor